# இந்திய வீடமைப்புத் திட்டம் நான்காம் கட்டத்தின் இரண்டாம் தொகுதி அங்குரார்ப்பண நிகழ்வின் ஆரம்ப உரை

**(பண்டாரவளை, 12 அக்டோபர் 2025)**

சங்கைக்குரிய மத குருமார்களே,

இலங்கை ஜனாதிபதி அதி மேதகு அநுர குமார திசாநாயக்க அவர்களே,

பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர் கௌரவ சமந்த வித்யாரத்ன அவர்களே

மீன்பிடி நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் கௌரவ இராமலிங்கம் சந்திரசேகர் அவர்களே

பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் பிரதி அமைச்சர் கௌரவ சுந்தரலிங்கம் பிரதீப் அவர்களே,

கௌரவ சுற்றுலாத்துறை பிரதி அமைச்சர் பேராசிரியர் ருவான் ரணசிங்கே அவர்களே,

இளைஞர் விவகார பிரதி அமைச்சர் கௌரவ டினிது சமன் குமார அவர்களே,

கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களே,

கௌரவ ஆளுநர்களே,

மதிப்புக்குரிய விருந்தினர்களே

அன்புக்குரிய இந்திய வம்சாவளி தமிழ் மக்களே

வணக்கம், ஆயுபோவன், நமஸ்கார்.

இந்திய வீடமைப்புத் திட்டத்தின் நான்காம் கட்டத்தின் கீழான இரண்டாவது தொகுதியினை ஆரம்பித்துவைக்கும் இந்த விசேட நிகழ்வில் பங்கேற்பது எனக்கு மிகுந்த திருப்தியையும் மகிழ்வையும் தருகின்றது.

இந்த நிகழ்வில் அதி மேதகு ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க அவர்கள் பங்குகொள்வதையிட்டு நாங்கள் பெருமிதம் கொள்கின்ற அதேசமயம் அதனை பெரும் பாக்கியமாக கருதுகின்றோம். இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான ஆழமானதும் விசேடமானதும், அசைக்க முடியாததுமான நட்புறவுக்கு இது ஓர் சான்றாகும். இது நமது மக்களின் அபிவிருத்தி மற்றும் நல்வாழ்வுக்கான பகிரப்பட்ட உறுதிப்பாட்டையும் பிரதிபலிக்கின்றது.

இலங்கை இந்தியா இடையிலான இந்த பகிரப்பட்ட உறுதிப்பாடானது இந்த வருடம் ஏப்ரல் மாதம் இந்திய பிரதமர் ஸ்ரீ நரேந்திர மோடி அவர்கள் மேற்கொண்டிருந்த விஜயத்தின் போது உறுதிப்படுத்தப்பட்டது. பிரதமர் மோடி அவர்களது தலைமைத்துவத்தின் கீழ் 'சப்கா சாத், சப்கா விகாஸ்' என்ற நோக்கின் கீழ் இந்தியா விக்சித் பாரத் என்ற இலக்கை நோக்கி முன் நகர்ந்து வருகின்றது. ஜனாதிபதி திசாநாயக்கா அவர்களது வழிகாட்டலின் கீழ் இலங்கையும் ‘வளமான நாடு, அழகான வாழ்க்கை” என்ற இலக்கை நோக்கிய மாற்றங்களை உருவாக்கும் பாதையில் தனது பயணத்தை ஆரம்பித்துள்ளது.

இன்றைய நிகழ்வானது உண்மையில் இந்தியா மற்றும் இலங்கை ஆகிய இரு நாடுகளையும் பிணைக்கும் பிரிக்க முடியாத பிணைப்புகள், வரலாறு, நட்புறவு ஆகியவற்றின் கொண்டாட்டமாகவே அமைகின்றது. நாங்கள் சகோதரர்கள்; நாங்கள் நாகரிக இரட்டையர்கள், கடந்த காலத்தை விட மிகவும் பிரகாசமானதும் அனைவரும் சமாதானம் கௌரவம் மற்றும் சிறந்த வாய்ப்புகளுடன் வாழக்கூடிய சூழலுடனானதுமான எதிர்காலத்தை நாங்கள் எதிர்பார்க்கின்றோம்.

இலங்கையில் உள்ள இந்தியாவை பூர்வீகமாகக் கொண்ட தமிழ் சமூகத்தினர் இரு நாடுகளுக்கும் இடையிலான வாழும் உறவு பாலமாக திகழ்கின்றனர். இச்சமுகத்துடன் இந்தியாவின் உறவானது பகிரப்பட்ட கலாசாரம் மொழி மற்றும் இரு நாடுகளினதும் மக்களிடையிலான உறவுகள் ஆகியவற்றில் ஆழமாக வேரூன்றிய ஒன்றாகும். காலம் காலமாக இந்த உறவானது மேலும் மேலும் வலுவடைந்துள்ளது.

இலங்கையில் உள்ள நமது இந்திய வம்சாவளி தமிழ் சகோதர சகோதரிகள், இலங்கையின் பொருளாதாரத்திற்கு பங்களிப்பதன் மூலமும், அதன் கலாசாரத்தை வளப்படுத்துவதன் மூலமும், அதேபோல அதன் சமூக கட்டமைப்பை மேம்படுத்துவதன் மூலமும் இலங்கை பயணத்தின் ஒருங்கிணைந்த பகுதியாக இருந்து வருகின்றனர். அவர்களின் கதை மீள்தன்மை மற்றும் உறுதிப்பாட்டைக் கொண்ட கதையாகும்.

இந்த சமூகத்தைச் சேர்ந்த ஒவ்வொரு உறுப்பினர்களதும் ஒட்டுமொத்த அபிவிருத்தியினை மேம்படுத்துதல், வலுவூட்டுதல், உறுதிப்படுத்துதல் ஆகியவையே எப்போதும் எங்களது இலக்காக காணப்படுகின்றது. இந்த பயணத்தில் இலங்கை அரசாங்கத்தின் நிலையான பங்காளராக இந்தியா இருந்து வருகின்றது. இந்நிலையில் வீடமைப்பு, கல்வி மற்றும் திறன் மேம்பாடு சுகாதார பராமரிப்பு மற்றும் சமூக அபிவிருத்தி போன்ற துறைகளில் நாங்கள் கைகோர்த்தவாறு ஒன்றிணைந்து பணியாற்றி வருகின்றோம்.

இன்று இந்திய அரசாங்கத்தின் ஆதரவுடன் இந்தியாவை பூர்வீகமாகக் கொண்ட தமிழ் சமூகத்தினருக்காக முன்னெடுக்கப்படும் வீடமைப்பு திட்டம் ஒன்றின் ஆரம்ப நிகழ்வுக்காக நாங்கள் ஒன்றுகூடியுள்ளோம். ஒட்டுமொத்தமாக இப்பிராந்தியத்திற்காக 14,000 வீடுகளுக்கான ஆதரவு அறிவிக்கப்பட்டுள்ளது. மூன்றாவது கட்டத்தின் கீழ் 4000 வீடுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள நிலையில் இன்னும் ஒரு சில வீடுகள் மாத்திரமே பூர்த்தி செய்யப்பட வேண்டிய நிலையில் காணப்படுகின்றன.

2017 ஆம் ஆண்டில் பிரதமர் மோடி அவர்கள் வீடமைப்புத் திட்டத்தின் நான்காவது கட்டத்தின் கீழ் மேலும் 10,000 வீடுகளை நிர்மாணிக்க ஆதரவளிக்கின்றமை குறித்து அறிவித்தலை விடுத்திருந்தார். 1100 வீடுகள் தற்போது நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன. இன்று நாம் இந்த திட்டத்தின் அடுத்த கட்டத்தினை ஆரம்பித்து வைக்கின்றோம்.

இந்நிலையில் இத்தொகுதி வீடுகள் ஆரம்பித்து வைக்கப்படுகின்றமைக்காக பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சின் ஆதரவுக்கும் உற்சாகத்திற்கும் நமது பாராட்டுகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

அதி மேதகு ஜனாதிபதி அவர்களே, சீமாட்டிகளே, கனவான்களே

இன்று இலங்கை முழுவதும் 65,000 வீடுகளை நிர்மாணிக்கும் உறுதிப்பாட்டினை இந்தியா கொண்டிருக்கின்றது. இது நாட்டின் 25 மாவட்டங்களையும் உள்ளடக்கிய திட்டமாகும். இன்றைய சூழலில் 64 பில்லியன் இலங்கை ரூபா நன்கொடையின் கீழ் இத்திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த பாரிய முயற்சியானது பல்லாயிரக்கணக்கான குடும்பங்களின் வாழ்வினை மாற்றியுள்ளது. அவர்களுக்கு இதன் மூலம் இருப்பிட வசதிகள் கிடைக்கப்பெற்றுள்ளன. அதேபோல அவர்களது கௌரவம் உறுதிப்படுத்தப்பட்டதுடன் வாழ்க்கை தரமும் மேம்பட்டுள்ளது.

வீடுகளை நிர்மாணிப்பது மாத்திரம் எமது இலக்கல்ல எதிர்காலத்தை கட்டி எழுப்புவதும் எமது இலக்காகும். கல்வி முதல் சுகாதார பராமரிப்பு வரையிலும் திறன் மேம்பாடு முதல் சமூக உட்கட்டமைப்பு வரையிலுமான பல்வேறு துறைகளையும் உள்ளடக்கி எமது முயற்சிகளை நாங்கள் அமுல்படுத்தி வருகின்றோம். இது பல லட்சக்கணக்கான மக்களின் வாழ்வில் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது.

டிக்கோயாவில் பல்வேறு சிகிச்சை வசதிகளையும் கொண்ட மருத்துவமனை ஒன்றை நாங்கள் நிர்மாணித்திருந்தோம். அதேபோல மாத்தளையில் மகாத்மா காந்தி சர்வதேச நிலையம் நிர்மாணிக்கப்பட்டது. அது மட்டுமல்லாமல் பல்வேறு கல்வி நிலையங்களின் உட்கட்டமைப்பினை நாம் அபிவிருத்தி செய்து தரமுயர்த்தியுள்ளோம். பெருந்தோட்ட பகுதிகளிலுள்ள பல்வேறு பாடசாலைகளில் ஸ்மார்ட் வகுப்பறைகள் எங்களால் அமைக்கப்பட்டது. இலங்கை தோட்டத் தொழிலாளர் கல்வி நிதியம் ஊடாக நாங்கள் புலமைப் பரிசில்களை வழங்கி வருகின்றோம். பெருந்தோட்ட பாடசாலைகளை தரமுயர்த்துவதற்கான திட்டமொன்றினை தற்போது முன்னெடுத்து வருகின்றோம். இத்திட்டங்கள் இந்தியாவை பூர்விகமாகக் கொண்ட தமிழ் சமூகத்தினருக்காக எங்களால் அமுல்படுத்தப்பட்ட பல்வேறு திட்டங்களில் ஒரு சில உதாரணங்களாகும்.

இச்சமுகத்தினர் இலங்கைக்கு வருகை தந்து 200 ஆண்டுகள் நிறைவடைந்தமையை குறிக்கும் முகமாக 2023 ஆம் ஆண்டில் 2.5 பில்லியன் இலங்கை ரூபா பெறுமதிக்கும் அதிக பெறுமதியுடனான விசேட அபிவிருத்தி ஒதுக்கீடு ஒன்றினை நாங்கள் அறிவித்திருந்தோம். இந்த ஒதுக்கீட்டின் கீழ் பல்வேறு திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டு வருகின்றன. கடந்த வருடம் நாங்கள் STEM ஆசிரியர் பயிற்சி திட்டம் ஒன்றினை நிறைவு செய்திருக்கின்றோம். இந்தத் திட்டத்தின் மூலம் பெருந்தொட்ட பாடசாலைகளை சேர்ந்த 2000க்கும் அதிகமான ஆசிரியர்கள் நன்மை அடைந்துள்ளனர். இந்நிலையில் இந்தத் திட்டத்தின் கீழ் புதிய செயல் திட்டங்களை அமுல்படுத்துவதனை துரிதப்படுத்துமாறு நாம் இலங்கை அரசாங்கத்திற்கு தொடர்ந்து

கோரிக்கை விடுக்கின்றோம். இந்த ஒதுக்கீட்டின் மூலமான நலன்களை அம்மக்கள் முன்கூட்டியே பெற்றுக் கொள்வதற்கு இது வழி வகுக்கும்.

பிரதமர் ஸ்ரீ நரேந்திர மோடி அவர்கள் மேற்கொண்ட அண்மைய விஜயத்தின் போது சீதை அம்மன் ஆலய அபிவிருத்திக்கான உதவியை அறிவித்திருந்தார். இதன் மூலம் சுற்றுலாத்துறை மேன்மை அடையும் அதேவேளை பெருந்தோட்ட சமூகத்தினரது தொழில்துறைகள் மேலும் வலுவடையும். அதன் பிரதிபலனாக பிராந்தியத்தின் பொருளாதார சமூக அபிவிருத்தி மேன்மை அடைவதற்கு வாய்ப்புகள் கிடைக்கும்.

இலங்கைக்கு இந்தியாவால் வழங்கப்படும் அபிவிருத்தி உதவியானது பொறுப்புணர்ச்சியுடன் வழங்கப்படும் ஆதரவு என பிரதமர் மோடி அவர்கள் தெரிவித்துள்ளார். இந்த பொறுப்பானது ஒரு குடும்ப உறுப்பினர் மீதான பொறுப்புணர்வுக்கு ஒத்ததாகும். இலங்கை முழுவதுமான அபிவிருத்திக்கான உறுதிப்பாட்டினை அடிப்படையாகக் கொண்டு நாங்கள் செயல்பட்டு வருகின்றோம். இலங்கைக்கான ஆதரவில் நாங்கள் மிகவும் உறுதியாக இருக்கின்றோம். இந்த ஒட்டுமொத்த முயற்சிகளின் பகுதியாகவே இந்தியாவை பூர்வீகமாகக் கொண்ட தமிழ் சமூகத்தினருக்கான எமது ஆதரவு அமைகின்றது.

சிறந்த புலவரும் ஞானியுமான திருவள்ளுவர் அவர்களது திருக்குறள்களில் ஒன்றான,

விருப்பறாச் சுற்றம் இயையின் அருப்பறா
ஆக்கம் பலவும் தரும்.

என்ற திருக்குறளை காட்டிலும் வேறு எவ்வாறான வார்த்தைகளால் இந்த பந்தத்தினை விவரிக்க முடியும். அதாவது ஓர் உறவின் மாறாத அன்பே வரையறையற்ற வளர்ச்சிக்கான ஆதாரமாகும்

அதி மேதகு ஜனாதிபதி அவர்களே, சீமாட்டிகளே, கனவான்களே

நாங்கள் வளர்ச்சி மற்றும் சுபீட்சத்தினை நோக்கி செல்லும் நிலையில் இதனையே நாம் உங்களிடம் இருந்து எதிர்பார்க்கின்றோம்.

இலங்கை மக்களின் நலன்கள் முன்னேற்றம் மற்றும் சுபீட்சத்திற்கான இந்தியாவின் அசைக்க முடியாத உறுதிப்பாட்டினை இச்சந்தர்ப்பத்தில் நான் மீண்டும் உறுதிப்படுத்துகின்றேன்.

ஒளி மகிழ்ச்சி மற்றும் செழுமை ஆகியவற்றின் பண்டிகையான தீபாவளியினை நாம் வெகு விரைவில் கொண்டாட இருக்கின்றோம். எங்கள் அனைவரது இல்லங்களிலும் தீபாவளி பிரகாசத்தை தருகின்றது. அதேபோல குறித்த இந்திய வீடமைப்பு திட்டத்தின் கீழான இந்த வீடுகள் எண்ணற்ற மக்களின் வாழ்வுக்கு ஒளியூட்டட்டும். அத்துடன் இலங்கை மற்றும் இந்திய அரசாங்கங்களது கூட்டு முயற்சிகள் நமது மக்களின் வாழ்விற்கு சுபீட்சத்தை தரட்டும்.

நன்றி, போமஸ்துதி. தன்யாவத்.